தமிழர் ஒருங்கிணைப்புக்குழு,
விக்ரோறியா,
அவுஸ்திரேலியா.
23.03.2023

## நாட்டுப்பற்றாளர் நாள் - 2023ஐ முன்னிட்டு நடாத்தப்படும் அன்னை பூபதி பொது அறிவுப் போட்டி தொடர்பான அறிவித்தல்.

அன்புடையீர்,

எதிர்வரும் ஏப்ரல் 16ம் நாள் ஞாயிற்றுக்கிழமை அன்று தமிழீழ நாட்டுப்பற்றாளர் நாள் வணக்க நிகழ்வு நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு ஆண்டுதோறும் வழமையாக நடாத்தப்பட்டுவரும் அன்னை பூபதி பொதுஅறிவுப்போட்டி இவ்வாண்டும் நடைபெறவுள்ளதால் அப்போட்டியில் பங்குபற்றும் அணிகள் தங்களை முற்கூட்டியே பதிவுசெய்துகொள்ளும்படி அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**காலம்: 16-04-2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி**
**இடம்: St John’s Parrish Hall, 52 Yarra Street, Heidelberg, VIC 3084**

**போட்டியாளருக்கான வரையறைகள்**

1. போட்டியாளர்கள் அனைவரும் எதிர்வரும் ஜூன் மாதம் 30ம் நாளில் பதினைந்து வயது நிறைவடைபவராகவோ அதற்குக் குறைவான வயதுடையவராகவோ இருக்க வேண்டும்.
2. போட்டியாளர்களே நான்குபேர் கொண்ட அணியை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும் அல்லது தனிநபராகப் பதிவுசெய்தாலும், தனிநபர்களை ஒன்றிணைத்து, குழு உருவாக்கப்படும்.
3. போட்டிக்கான பதிவை அணியின் / தனிநபர் சார்பில் ஒருவர் மேற்கொள்ள வேண்டும்.
4. **பதிவுக்கான இறுதி நாள் 10/04/2023 மாலை ஆறு மணி.**
5. அணிக்கான பெயரைப் போட்டியாளர்களே தெரிவுசெய்து கொள்ளலாம். அணிப்பெயர் கட்டாயம் தமிழ்ப்பெயராக அமைய வேண்டும்.
6. ஒவ்வொரு கேள்விகளிலும் 4 விடைகள் தரப்படும். சரியான விடையை சுழற்சிமுறைக்குரியவர் கூறவேண்டும். அவர் சரியான விடை கூறினால் 5 புள்ளிகள் வழங்கப்படும். அவர் தவறும் பட்சத்தில், அதே அணியை சார்ந்த யாராவது ஒருவர் கூறினால் 3 புள்ளிகள் வழங்கப்படும். அந்த அணி சந்தர்ப்பம் இழந்து எதிரணிக்கு கேள்வி சென்றால் 2 புள்ளிகள் வழங்கப்படும்.
7. கேள்வி கேட்டு விடையளிப்பதற்கான நேர இடைவெளி 1 நிமிடம். முதலாமவர் பதில்கள் தவறி அதே அணியை சேர்ந்தவருக்கு கேள்வி சென்றால் அவருக்கு முப்பது விநாடிகள். எதிரணிக்கு கேள்வி சென்றால் அங்கும் முப்பது விநாடிகள்.
8. கேள்விகள், தமிழர் தாயகம், ஒஸ்ரேலியா மற்றும் கணிதம், விஞ்ஞானம், விளையாட்டு என்ற தலைப்புக்களில் உள்ளடங்கலாக இருக்கும்.

**போட்டிக்கான பதிவுக்கும் மேலதிக விபரங்களுக்கும் தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 0433002619.அல்லது 0452205399 அல்லது 0411303490 அல்லது 0406429107**

இவ்வண்ணம்
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - விக்ரோறியா